4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் இனி எப்போதும், எதற்காகவும், யாரிடமும் கையேந்தி நிற்காத நிலைமையை ஏற்படுத்தியே தீருவேன். இந்த இலட்சியத்தை என் வாழ்நாளில் நிறைவேற்றியே தீருவேன் என்ற உறுதியோடு செயல்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்திற்கே வழிகாட்டும் வகையில், பொற்கால ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 211 முதல் 225 வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன், மனுக்கள் குழுவின் தலைவர்.*

திரு. ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமாய் அரசாளப் பிறந்தவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தன் மனதில் தமிழகத்தைத் தாங்கி நிற்கும் இமயம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தன் திறத்தால் தமிழகத்தைத் தலைநிமிர்த்தும் சிகரம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கடவுள் அனுப்பிய இறைதூதர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் திருவடி பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 42 முதல் 47 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.